**வரகாபொல பிரதேச சபை - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வரகாபொல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய தெளிவுபடுத்தும் தகவல்களின் பொழிப்புடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வரகாபொல பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்.ஏயு.எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான

கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பிரதேச சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக காலவரையறைகளினுள் மற்றும் உரிய சட்ட விதிகளிற்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடம் ரூபா 100,000 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஜர்னல் குறிப்பின் மூலம் சரி செய்வதென. | கணக்கை சரி செய்ய வேண்டும். |
| (ஆ) | அலுவலக கட்டிடத்தின் ரூபா 245,550 ஆன மூலதன நிர்மாணம் மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | கிடைத்த உல்லாச வரி வருமானம் ரூபா 372,500 தெகை பொது வைப்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | உல்லாச வரி குறைப்பதற்காக ஆளுனர் அவர்களின் தீர்மானம் கிடைத்த பின்னர் வருமானத்திற்கு எடுப்பதென. | - மேற்படி - |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்கு விடயங்கள் 04 இல் நிதிக்கூற்றுக்கள் பிரகார மற்றும் அட்டவணைகள் பிரகாரம் மீதிகளிற்கு இடையில் ரூபா 9,605,066 ஆன வித்தியாசம் நிலவியது. | வித்தியாசத்தை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதென. | கணக்கை சரி செய்ய வேண்டும். |
| (ஆ) | கணக்கு விடயங்கள் 04 இல் நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதிகள், பண்டக கணிப்பீடறிக்கை பிரகாரம் மீதிகளிற்கு இடையில் ரூபா 708,944 ஆன வித்தியாசம் நிலவியது. | ஜர்னல் குறிப்பின் மூலம் சரி செய்துள்ளதென. | - மேற்படி - |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் கூட்டுத் தொகை ரூபா 172,388,657 ஆன 07 கணக்கு விடயங்களிற்கான ஆவணங்கள், அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிலையான சொத்து பதிவேட்டை தயாரிக்க நடவடிக்கை எடுப்பதென. | நிலையான சொத்து பதிவேடு, அட்டவணை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6.4 போதிய அதிகாரத்துடன் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

| | அதிகாரம் கிடைக்காத கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரம் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | போக்குவரத்து செய்த பயணங்கள் தொடர்பாக எவ்வித உறுதிப்படுத்தலும் இன்றி முன்னால் தவிசாளர் மற்றும் இரண்டு சாரதிகளிற்கு 2018 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை ரூபா 723,200 ஆன பிரயாணப் படிகள் செலுத்தப்பட்டு இருந்தன. | தவிசாளரின் கடமை பிரயாணங்களின் தேவைப்பாட்டை அறிவிக்காததால் பிரயாணம் செய்த இடத்தை மாத்திரம் ஓட்டக் குறிப்பு புத்தகத்தில் குறிப்படுவதென. | போதிய எழுத்துமூல சான்றுகளின் மீது கொடுப்பனவு செய்ய வேண்டும். |
| (ஆ) | 2020 சனவரி முதல் 2023 மார்ச் காலஎல்லையினுள் முன்னால் தவிசாளர் கலந்து கொண்ட 37 குழுக் கூட்டங்களிற்கு கெப் வண்டியை 4,300 கிலோ மீற்றர்கள் செலுத்தியதற்காக ரூபா 66,132 ஆன எரிபொருள் சபை நிதியத்திலிருந்து பெறப்பட்டிருந்தது. குழுக் கூட்டம் 37 தினங்களில் முழு கடமை நேரமும் அலுவலகத்திற்கு வெளியில் இருந்ததாக ஓட்டக் குறிப்வுக்களில் குறிப்பிடப்பட்டு இருந்தன. | வண்டி அலுவலகத்தில் உள்ள சந்தர்ப்பம் மற்றும் கடமை பிரயாணங்களை வெவ்வேறாக ஓட்டக் குறிப்பு புத்தகத்தில் குறிப்பிடும் போது ஏற்பட்ட கைத்தவறினை சரி செய்து கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | மேற்படி |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 371 | உப கட்டுநிதியை திசெம்பர் 31 திகதி தீர்க்க வேண்டிய போதும் ரூபா 469,631 ஆன 19 கட்டுநிதிகள் | தற்போது தீர்க்க நடவடிக்கை எடுத்துள்ளதென. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீளாய்வாண்டு இறுதி வரை தீர்த்திருக்கவில்லை. அவற்றுள் 2021 மற்றும் 2022 ஆண்டுகளிற்குரிய தீர்க்கப்படாத ரூபா 72,845 ஆன 03 கட்டுநிதிகள் நிலவின. | | எடுக்க வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 571 | 02 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 1,394,176 ஆன 103 வைப்புக்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | 46 வைப்புக்களை வருமானத்திற்கு எடுத்தல், ரூபா 119,500 ஆன 4 வைப்புக்களை தொடர்ந்தும் வைத்திருப்பது, 04 வைப்புக்கள் பதிவேட்டு தவறாக இனங்கண்டு சரி செய்யப்பட்டுள்ளது எனவும் ஏனைய ஒப்பந்த வைப்புக்களை ஆண்டிறுதியில் விடுவிக்க அல்லது பதிலீடு செய்யவதென. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சுற்றறிக்கை | | | |
| (i) | உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்றறிக்கை கோவையின் இலக்கம் 03/2010 கொண்ட சுற்றறிக்கையின் 13 பந்தி | 09 அனுமியற்ற நிர்மாணங்களிற்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பின்னூட்டல் செய்து முன்நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதென. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நகர அபிவிருத்தி அதிகார சபையினால் 1987 செப்டம்பர் 30 திகதிய இலக்கம் 05/01/119 கீழ் வெளியிட்ட திட்டமிடல் சுற்றறிக்கை இலக்கம் 08 மற்றும் 1993 மார்ச் 16 திகதிய இலக்கம் 05/01/150 கீழ் வெளியிடப்பட்ட திட்டமிடல் சுற்றறிக்கை இலக்கம் 14 | ஊள்ளூராட்சி நிறுவனம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை பெயரில் இணைந்த வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிக்க வேண்டிய போதும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காத காரணத்தால் மீளாய்வாண்டில் 02 சந்தர்ப்பங்களில் பொது வாகன தரிப்பிட நிர்மாணத்திற்காக அறவிடப்பட்ட சேவைக் கட்டணம் ரூபா 500,000 பொது வைப்பின் கீழ் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | குறித்த கணக்கை திறந்த பின்னர் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைத்துள்ள தொகையை குறித்த கணக்கிற்கு செலவு வைப்பதென. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள்<br>--------------------------------- | | | |
| (i) | 204 பிரிவு | பொருள் பற்றாக்குறை பெறுமதியை குறித்த அலுவலரிடமிருந்து அறவிடவும், மிகையை ஏடுகளிற்கு எடுக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். எனினும், 2023 ஆகஸ்ட் அளவில் ரூபா 117,160 ஆன 325 பொருள் உருப்படிகளின் பற்றாக்குறையும் ரூபா 1,567,430 ஆன 539 அலகுகளின் மிகையும் நிலவின. | மிகையை பொருட் பதிவேட்டிற்கு உட்படுத்தியுள்ளதுடன் பற்றாக்குறை பொருட்களை குறித்த நபர்களிடமிருந்து அறவிடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளதென. | பிரதேச சபை விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 178 (2) (2) (அ) விதி | போதிய ஏற்பாடுகள் இன்றி டென்டரை நடைமுறைப்படுத்திய பின்னர் 02 சந்தர்ப்பங்களில் ரூபா 3,037,225 ஆன ஏற்பாடு வேறு செலவு விடயங்களிலிருந்து மாற்றப்பட்டிருந்தன. அது அந்த செலவு விடயத்திற்கான மொத்த தேறிய ஏற்பாட்டின் 76 சதவீதமாகும். | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9(3) பிரிவு பிரகாரம் செலவு விடய மாற்றத்திற்கான அதிகாரம் சபை செயலாளரிற்கு உரியதென. | பிரதேச சபை விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியுடள் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 29,968,619 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,418,099 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| வருமான வகை | 2023 மதிப்பிடப்பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை | 2022 மதிப்பிடப் பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 7,984,000 | 8,814,167 | 6,299,993 | 7,781,796 | 9,045,000 | 8,180,703 | 7,509,630 | 4,613,491 |
| வாடகை | 20,896,515 | 5,588,033 | 13,931,276 | 1,805,805 | 26,806,647 | 12,164,136 | 12,110,966 | 839,276 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 3,396,000 | - | 1,317,387 | 332,900 | 3,549,100 | 1,286,595 | 1,320,145 | 2,950 |
| ஏனைய வருமானம் | 15,299,180 | 1,061,861 | 10,851,326 | 955,345 | 9,030,000 | 10,943,014 | 8,086,125 | 508,042 |
| | 47,575,695 | 15,464,062 | 32,399,984 | 10,875,846 | 48,430,747 | 32,574,449 | 29,026,868 | 5,963,760 |

### 2.2.2. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 26 அரச நிறுவனங்களிலிருந்து 2022 திசெம்பர் 31 திகதி நிலுவை ரூபா 148,701 ஆன வீதிவரி மற்றும் ஏக்கர் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | அரச நிறுவனங்களை அறிவூட்டியுள்ளதென. | பிரதேச சபை சட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 திகதியன்று நிலவிய ரூபா 3,930,194 ஆன நிலுவை வீதவரி மீதியினுள் 05 ஆண்டுக விஞ்சிய ரூபா 325,494 ஆன மீதி நிலயது. | நிலுவை தொகையொன்றை பதிவழிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய தொகையையும் விரைவில் அறவிடுவதென. | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |
| (இ) | 2023 திசெம்பர் 31 திகதியன்று நிலவிய ரூபா 182,815 ஆன நிலுவை வீதவரி மீதியினுள் 05 ஆண்டுக விஞ்சிய ரூபா 146,879 ஆன மீதி நிலயது. | - மேற்படி - | - - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அன்பளிப்பாக கிடைத்த 50 நீர் மாணிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறுமதியை இனங்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதென. | பெறுமதியை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நீதிமன்ற தீர்ப்பின் மீது ஆதன உரிமை சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அந்த நிலத்தில் நிர்மாணித்திருந்த 03 இறைச்சிக் | இழக்கப்பட்ட கடையறைகளிற்கு பதிலாக வாராந்த சந்தை 3 புதிய | சபைக்கு சொந்தமான ஆதனங்களின் உரிமையை காத்துக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடைகளின் உரிமையும் சபைக்கு இழக்கப்பட்டிருந்தன. | கடையறைகளை நிர்மாணித்து 2024 ஆண்டிற்கு டென்டர் வழங்கப்பட்டுள்ளன. | |
| (இ) | அனுமதியற்ற 09 நிர்மாணங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பின்னூட்டல் செய்து முன்நடவடிக்கை எடுப்பதென. | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2023 திசெம்பர் 31 திகதியன்று ரூபா 8,968,875 ஆன கடன்கொடுனர் மீதியினுள் 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 1,011,285 ஆன மீதி நிலவியது. | எதிர்காலத்தில் தீர்ப்பதென. | தீர்க்கப்பட வேண்டும் |

**3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திரைப்பட அங்கொன்றில் இருந்து 2019 ஆண்டிலிருந்து நிலுவை ரூபா 163,306 ஆன உல்லாச வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதென. | வருமானத்தை தாமதமின்றி திரட்ட வேண்டும். |
| (ஆ) | 29 இடங்களை குத்தகை வழங்க இயலாது போன காரணத்தால் 2023 ஆண்டில் ரூபா 3,488,625 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | மூன்றாம் முறையும் டென்டர் கோரிய போதும் டென்டர் பெறப்படவில்லை என. | - மேற்படி - |
| (இ | வருடாந்தம் ரூபா 2,000,000 வருமானத்தை எதிர்பார்த்து ரூபா 3,824,232 தொகை செலவில் இலத்திரனியல் பெயர் பலகையொன்றை 2019 ஆண்டில் அமைத்திருந்த போதும், 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் ரூபா 370,000 மாத்திரம் ஈட்டப்பட்டிருந்தது. இந்த அறிவித்தல் பலகைக்குரிய விடயக் கோவையும் காணாமல் போயிருந்தது. | விடயக் கோவை காணாமல் போனது தொடர்பாக தற்போது விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதென. | - மேற்படி - |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச மதிப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கு பதிலாக செயலாளர் உள்ளிட்ட குழுவொன்றின் மூலம் மேற்கொண்ட மதிப்பீட்டின் மீது 209 காணி கட்டிடங்களிற்காக ரூபா 125,171,911 ஆன பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2017 இன் 16 இலக்க 04/2017 சுற்றறிக்கை பிரகாரம் 2025 ஆண்டில் சொத்துக்கள் கணிப்பீட்டை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | குறித்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | டெக்டர் ஒன்று 2017 ஆண்டு முதல் ஓட்டத்திலிருந்து அகற்றியிருந்த போதும், பராதீனம் செய்திருக்கவில்லை. | பதிவுச் சான்றிதழை வழங்கிய உடனே முன்நடவடிக்கை எடுப்பதென. | பராதீன நடவடிக்கையை உரியவாறு மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | இயந்திரம் மற்றும் உபகரண 05 அலகுகள் பல ஆண்டுகளாக மாயிங்நொழுவ பொது நூலக முன்னால் துருப்பித்தவன்னம் நிலவின. | இந்த இயந்திர உபகரணங்களை பராதீனம் அல்லது திருத்த வேலைகளை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | 2020 ஒக்டோபர் 02 திகதிய மற்றும் இலக்கம் 05/2020 சொத்துக்கள் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | சபையில் உற்பத்தி செய்த 22,486 கிலோ கிராம் பசளை 2023 ஆகஸ்ட் மாதம் வரை விற்க அல்லது வேறு ஆக்கபூர்வ செயற்பாட்டிற்கு பயன்படுத்தாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. | வெளி நிறுவனத்திற்கு விற்க நடவடிக்கை எடுத்துள்ளதெனவும் பல கருத்திட்டங்கள் ஊடாகவும் பசளை வழங்க நடவக்கை எடுப்பதென. | பசளையை விற்க அல்லது வேறு ஆக்கபூர்ப செயற்பாடுகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர மண்டப கட்டிட நிர்மாணம் 2022 ஆண்டில் இருதரப்பு இணக்கப்பாட்டுடன் ரூபா 23,811,882 பெறுமதியான பூர்த்தியான வேலைகளுடன் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள போதும், பயன்படுத்த முடியுமானவாறு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்காததன் காரணமாக 2024 ஏப்ரல் 25 அளவிலும் அந்த கட்டிடம் விளைவற்று காணப்பட்டது. | இரண்டாம் கட்டத்திற்காக ரூபா 57,500,982 பெறுமதியான மதிப்பீட்டை தயாரித்து பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள அனுப்பப்பட்டுள்ளதென. | பயன்படுத்த முடியுமானவாறு வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | கெட்டகொடேவத்த திண்மக் கழிவு முகாமைத்துவ அலகிற்கு அருகில் புதிய கழிவுக் கொட்டில் ஒன்றை நிர்மாணிக்க 2022 ஜுலை மாதத்தில் ரூபா 1,325,903 தொகை செலுத்தி அத்திவாரம் மாத்திரம் இட்டு நிர்மாணம் கைவிடப்பட்டுள்ளதால் தற்போது இந்த இடத்தில் புற்கள் முளைத்து காணப்பட்டது. | மாகாண சபை ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இந்த ஆண்டில் அதன் நிர்மாணத்தை பூர்த்தி செய்ய இயலுமென. | நிர்மாண வேலைகளை விரைவில் பூர்த்தி செய்ய வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகார ஆளணியில் 2023 ஜுன் 30 திகதியன்று 25 வெற்றிடங்கள் மற்றும் 01 மிகையும் நிலவின. ஊதிய மற்றும் அமைய அடிப்படையில் 17 ஊழியர்களும், ஏற்பவருக்கு தனிப்பட்ட | 2013 ஆண்டில் அங்கீகார ஆளணியுடன் செயற்படுவது கடினமானமை மற்றும் தொடர்ந்து சேவை வழங்கும் தேவைப்பாட்டின் மீது ஊதிய அடிப்படையில், அமைய | வெற்றிடங்களை நிரப்பி எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் 20 பேர்களும் ஆட்சேர்க்கப்பட்டு இருந்தனர். | அடிப்படையில் மற்றும் ஏற்பவருக்கு தனிப்பட்ட அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர் என. | |
| (ஆ) | அங்கீகார ஆளணியிலான சுகாதார மற்றும் 15 கள தொழிலாளர்கள், 02 அலுவலக ஊழியர்கள், 03 நூலக உதவியாளர்கள் மற்றும் ஒரு காவலாளர் 2013 ஆண்டு முதல் இதுவரை காலமும் குறித்த பணிகளில் ஈடுபடுத்தாது வேறு சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டு இருந்தனர். | மயானம், முன்பள்ளி, மின்சார பிரிவு, சாரதி, நீர் கருத்திட்டம், ஆயுர்வேத நடவடிக்கை, வருமான பரிசோதகர் பதவிகளில் வெற்றிடங்கள் நிலவிய போதும் நிரப்பியிருக்காதமை மற்றும் அத்தியவசிய சேவை ஆகையால் ஏனைய பதவிகளின் அலுவலர்களை இணைத்து சேவை மேற்கொள்ள நேர்ந்ததென. | திட்டவட்ட பணிகளிற்கு ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்கள் குறித்த பணிகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (இ) | பொது சேவைகள் ஆணைக்குழு செயற்பாட்டு நடைமுறை விதிகளின் 203 விதிக்கு மாற்றமாக, 19 அலுவலர்க்ள 06 ஆண்டுகளிற்கும் 23 ஆண்டுகளிற்கும் இடையிலான காலமாக இடமாற்றம் கிடைக்காது தொடர்ந்து ஒரே நிலையத்தில் கடமையாற்றிக் கொண்டு இருக்கின்றனர். | இடமாற்றம் செயற்படவில்லை, பதில் அலுவலர் வராமை போன்ற காரணங்களின் மீது சில அலுவலர்களிற்கு இடம் மாற முடியாது போனதென. | பொது சேவைகள் ஆணைக்குழு நடைமுறை விதி பிரகாரம் வருடாந்த இடமாற்றம் செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 2023 திசெம்பர் 31 திகதியன்று இரண்டு அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 105,305 ஆன கடன் மீதியை 02 ஆண்டுகள் முதல் 13 ஆண்டுகள் காலம் வரை பழையதாகும். | ஒரு கடன் மீதியை பணிக்கொடையிலிருந்து அறவிட நடவடிக்கை எடுத்துள்ளதுடன், ஏனைய கடன் மீதியை பதிவழிக்க முன்வைத்துள்ளதென | நிலுவை ஊழியர் கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |